Registered as a News Paper பக்கங்கள்: 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 27 (10-02-1992) திங்கட்கிழமை ஓசை: 357

## தனிச்சிங்களத்தில் விண்ணப்பப் படிவங்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடாத்தவுள்ள அகில இலங்கை ரீதியிலான கரப்பந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் யாவும் சிங்களத்தில் மட்டுமே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் விபரங்களை அறிந்து கொள்ளவும், விடயங்களைப் புரிந்துகொள்ளவும் முடியாமல் தமிழ்ப்பகுதி விளையாட்டுக்கழகங்கள் தடுமாறுவதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

# வவுனியா வடக்கில் படை குவிப்பு
# ராணுவ நடவடிக்கைக்கு முஸ்தீபு

(வவுனியா)

வவுனியா நகரின் வடபகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். வவுனியா நகர் பகுதியிலும், அதன் தெற்கிலும் உள்ள இராணுவமுகாமில் கடந்தமாதம் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரே தற்பொழுது வடக்கு பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து வடபகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இப்படை குவிப்பு பெருமளவில்பேயாடிகூழாங்குளம்தடை முகாமிலும் அதனைச் சுற்றிவரவுள்ள காவலரண்களிலும் இடம் பெறுகிறது.

கடந்த 7 ஆம் திகதி வவுனியா நகரப்பகுதி இராணுவ முகாம்களிலிருந்து லொறிகள் மூலம் ஏற்றிவரப்பட்ட ஏராளமான படையினர் இப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

பேயாடி கூழாங்குளத்திலிருந்து மடுக்கந்த வரையும் அமைக்கப்பட்டிருக்கும் காவலரண் பகுதிகளிலும் இராணுவப்படையணி குவிக்கப்படுகிறது.

வவுனியா நகரப் பகுதிக்கு வடக்கே அமைந்துள்ள இக்காவல் அரண்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை வவுனியா தெற்குப் பகுதியில் உள்ள ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் சீனத்தயாரிப்பு டாங்கிகள் நிறுத்திவைக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஈரோஸ் உறுப்பினர் பதவி இழந்தனர்

ஈரோஸ்பாராளுமன்றஉறுப்பினர்கள் தமது எம். பி. பதவியை இழக்கவுள்ளனர்.

இந்த அமைப்பைச்சேர்ந்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாகப் பாராளுமன்றம் செல்லவில்லை என்பதால் அவர்கள் பதவியை இழப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதுகுளத்தில் கைதான பலர் மகசீன் சிறையில்

புதுக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் பலர் மகசீன் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஜனவரி மாதம் எட்டாம் திகதி கைது செய்யப்பட்டவர்கள் சில தினங்களுக்கு முன்னர் உறவினர்களுக்கு காட்டப்பட்ட பின்னர் மகசீன் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அனுப்பி வைக்கப்பட்டவர்களில் பலர் ஏற்கனவே இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்று கூறப்பட்டது. (தி)

## வவுனியா நகரைச் சூழ உப-பொலிஸ் நிலையங்கள்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி எல்லைகளில் உப பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

மன்னார்-வவுனியாபிரதான வீதியில் நெளுக்குளம் என்ற இடத்திலும், வவுனியா-ஹொரவபொத்தான வீதியில் வெளிக்குளம் என்ற இடத்திலும், வவுனியா-யாழ்பிரதான வீதியில் தாண்டிக்குளம் பகுதியிலும்,வவுனியாவிற்குதெற்கே கண்டி வீதியிலும் உப பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்
### கீர்த்தி

மார்பு நோய் காரணமாக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரவேங்கை கீர்த்தி (அன்ரு யோசப்) நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

இவருக்குவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பட்டாசுத் தொழிற்சாலை வெடிவிபத்தில் 5 பேர் பலி

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பை அடுத்துள்ள ஹிம்பிலாபிட்டியில் நேற்று பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் தொழிற்சாலை சொந்தக்காரர் உட்பட ஐந்து பேர் பலியாகினர். எட்டுப்பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தினால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா தடை முகாமில் பெண்கள் பலர் கைது

வவுனியாவில் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ்ப் பொது மக்கள் கைது செய்யப்படுகின்றனர்.

பேயாடி கூழாங்குளம் இராணுவ தடை முகாமில் சோதனையில் ஈடுபடும் இராணுவத்தினர் அதிகம் பெண்களைக் கைது செய்கின்றனர்.

கைது செய்யப்படுபவர்களில் பலர் விடுதலை செய்யப்படுவதில்லை (தி)

## மல்வத்த பீடாதிபதி செயல்; இனவாதத்திற்குத் தூபமிடும்
### இங்கிலாந்து இன்டிபென்டென்ற் கண்டனம்

(லண்டன்)

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்காப் படையினருக்கு நல்லாசி வழங்கவும், தெய்வங்களை உதவிக்கழைக்கவும் யாழ். குடா நாட்டிற்கு விஜயம்செய்தமல்வத்தபீடாதிபதி விபாசிதேரோ இராணுவத்தினரின் காவல் நிலையில் நின்று படம்பிடித்துகொழும்பு நாளிதழ்களில் படம் வெளிவந்தமை இனவாதத்துக்கு மேலும் தூபமிடும் செயல் என்று இங்கிலாந்தில் ஆகக் கூடிய விற்பனையுள்ள இன்டிபென்டென்ற் நாளிதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச்செய்தியில், மிக விரைவில் யாழ்ப்பாணக் குடா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைதீவில் மோதல் 5 படை பலி; நால்வர் காயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற மோதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு மேலும் நான்கு இராணுவத்தினர்காயமுற்றதாக பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வியாழனன்றுகாலை

( 2 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய சமூகசேவை ஆலோசகர் யாழ். வரவுள்ளார்

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சமூக சேவை ஆலோசகர் திருமதி பாபரா என்பவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு ஒரு வாரகால உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணையால் அதிர்ச்சி குடும்பஸ்தர் பலி

வவுனியா தடை முகாம் பகுதியில் இருந்து நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் அதிர்ச்சியுற்ற குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்திருக்கிறார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தின் பொது ஏ. ஜேசுதாஸ் என்ப

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை கிழக்கு மீது பீரங்கித் தாக்குதல்

(குருநகர்)

பூநகரி, கௌதாரிமுனை என்னும் இடத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை அரியாலை கிழக்குக் கரையோரப் பகுதியைநோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

காலை 7-00 மணியிலிருந்து 7-30 மணிவரை தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல் காரணமாக பூம்புகார், உதயபுரம், மணியம் தோட்டம் பகுதிகளில் பதற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கத். குருமாரின் யாழ். விஜயம் மல்வத்த பீடாதிபதி கண்டனம்

கத்தோலிக்க மதகுருமாரும், கிறிஸ்தவ சமயப் பாதிரிமாரும் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டதை வண. மல்வத்த மாநாயக்க ரம்புவெல்ல விசுபாசி தேரோ கண்டித்துள்ளார். இச் செய்தியை திவயின பத்திரிகைவெளியிட்டுள்ளதாக நேற்றிரவு பி. பி. ஸி. தெரிவித்தது.

புலிகளின் தலைவர்களும் கத்தோலிக்க - கிறிஸ்தவ மத குருமாரும் சிநேகித பூர்வமாகப் பேசிக் கொண்டார்கள் என்றும் திவயின தெரிவிக்கின்றது.

இதேவேளை பௌத்த பிக்குகள் படைமுகாம்களுக்கு விஜயம் செய்து, படைகளுக்கு ஆசி வழங்கி வருகையில், யாழ்ப்பாணம் வந்த கத்தோலிக்க மதகுருமார் குடாநாட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# எஸ். ஐ. இடமாற்ற கட்டளை புலம்பிச்சாதித்த எம். எல். ஏ.

சட்டப் பேரவை உறுப்பினரின் உதவியாளர் ஒருவர் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டரின் மோட்டார் சைக்கிளால் தட்டுப்பட்டார். விளைவுபொலிஸ் சப் இன்ஸ்பெக்டருக்கு இடம் மாற்றல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

தமிழ்நாட்டின் திருக்கோயிலூர் பகுதியில் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது டிசம்பர் முதல் வாரத்தில் அமைச்சர் ஆனந்தன் இப்பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அரியூர் கிராமததில் மாணவர் விடுதியொன்றைத் திறந்து வைந்த அவர், திம்மச்சூர் என்ற இன்னுமொருகிராமத்தில் அ.தி.மு.க. பிரமுகர் ஒருவரின் வீட்டிற்குமதியஉணவுக்கு சென்றார். அவருடன் கூடவே மாவட்ட கலெக்டர் ராமகிருஷ்ணன், முகையூர் எம். எல். ஏ. சாவித்திரி அம்மாள்ரிஷிவந்தியம்எம்.எல்.ஏ. கோவிந்தராஜு ஆகியோரும் சென்றிருந்தனர். அமைச்சரின் காருக்கு பைலட்டாக மோளடார் சைக்கிளில் திருக்கோட்லூர் சப்-இன்ஸ்பெக்டர்இங்யிகோவும் போயிருந்தார். அமைச்சர் சாப்பிட்ட அந்த வீட்டின் பிரமுகர் சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோவையும் சாப்பிட அழைத்துள்ளார். அமைச்சர் கிளம்புவதற்கு முன் சாப்பிட்டாக வேண்டுமென்ற அவசரத்துடன்மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளங்கோவின் மோட்டார் சைக்கிள் கைபிடி ஒருவர் மீது இடித்து விட்டது. இடிபட்டவர் தேவசேகர். இவர் முகையூர் தொகுதிஎம்.எல்.ஏ. சாவித்திரி அம்மாவின் உதவியாளராகப் பணிபுரிபவர்.

ஆனால் எம்.எல்.ஏ.சாவித்திரி அம்மாளோ, ''என்னை இடிச்சா என்ன, என்னுடைய பி.ஏ-யை இடிச்சா என்ன எல்லாம் ஒண்ணுதான்'' என்றபடி மேலிடம் எல்லாம்சென்று மோட்டார் சைக்கிளால் சப்-இன்ஸ்பெக்டர் தன்னை இடித்துவிட்டதால் கால்வீங்கி விட்டது என்று அழுது புலம்பி சப் இன்ஸ்பெக்டருக்கு இடமாற்ற உததரவு வாங்கிக் கொடுத்துள்ளார்.

## 198-ம் நாள் நினைவஞ்சலி



சத்யபாமா | கிருஷ்ணதேவன்
**வீரவேங்கை அருள்**

நவாலி மண்ணில் | திதி | ஆனையிறவு மண்ணில்
**12-03-1973** | **10-02-1992** | **28-07-1991**

நானிலம் போற்றும் நவாலி மண்ணில்
நற்றவப் பேற்றில் வந்துதித்தே
மானி இந்துக் கல்லூரியில்
மாண்புடன் கல்வி பயின்றே
புயலென எழுந்து புலியொடு சேர்ந்து
கயலென ஓடிப் போர்க்கள மாடி
ஆனையிறவு மானப் போரில்
மாவீரனான கிருஷ்ணதேவா!
மரணித்த செய்தி எட்டவில்லை உடனும்
எட்டொடு ஏழும் இணைந்த நாளில்
எட்டியது அச்செய்தி அறிவிழந்தோம்
உன்னுடலைக் கண்டு கதறியழ
உன்னிறுதிக் கிரியைகள் உரிமையுடனாற்ற
கொடுத்து வைக்காத பாவிகளடா நாங்கள்!
எடுத்துச் செல்வாய் உன்னுடன் எம்மை
உன் கனவு நனவாக
உன் வழி தொடர்வோம்.

இன்று (10-02-1992) இடிகுண்டடி, நவாலி வட்க்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடிகுண்டடி, நவாலி வடக்கு, 10-02-1992.
பெற்றோர், சகோதரர், உறவினர்.
(சி/ 3908)

## குடிமனைகள் மீது ஷெல் தாக்குதல்

(தெல்லிப்பழை)

பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை ஐந்துமணி தொடக்கம் ஒருமணி நேரம் தொடர்ச்சியாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதன் போது ஏவப்பட்ட ஷெல்கள் தெல்லிப்பளை. கட்டுவன், ஏழாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

### எறிகணையால்

வரே மரணமடைந்திருக்கிறார். இவரது உடல் நேற்று மாலை யாழ் போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அதிர்ச்சியே மரணத்திற்கான காரணம் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (க)

### காரைதீவில்

பதினொரு மணியளவில் காரைதீவுப்பகுதியில் இராணுவத்தினர் சுற்றி வளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது மோதல் இடம்பெற்றதாகவும், இம்மோதல் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வவுனியா

இதே சமயம், பிரதான வீதிகளுடன், கிராமப் புறங்களில் தமிழ் மக்கள் நகருக்குள் நுழையும் பகுதிகளிலும் உப பொலிஸ் நிலையங்கள் திறக்கும் வேலைகள் இடம் பெறுகின்றன.

வவுனியா நகரப்பகுதி செல்வோருக்கு அனுமதி அட்டை (பாஸ்) வழங்கும் நோக்குடனேயே இந்த உப பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

100 க்கு மேற்பட்ட லவ் பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு 'றேடியோஸ் பதி'' 266, பருத்தித்துறை வீதி, நல்லூர் அல்லது 58, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(சி/3904)


# புலிகளுடன் மகனை இணைத்த வீரத்தாய்

தமது மகனை விடுதலைப் புலிகளோடு சேர்ந்து போராடுவதற்கு தாய் ஒருவர் அர்ப்பணித்துள்ளார். நேற்று முன் தினம் காலை பதினொருமணியளவில் வல்வெட்டித்துறை கடற்புலிகள் செயலகத்தில் கடற்புலிகளின்தளபதி கங்கை அமரனிடம் வல்வெட்டித்துறை ஊரிக்காடு பகுதியைச் சேர்ந்த திருமதி கு. கிருஷ்ணகுமாரி என்பவர் தனது மகன் ரமணனை ஒப்படைத்தார். இவரது இன்னுமொரு மகனான பட்சம் விடுதலைப்புலிகள் அணியில் போராளியாக இருப்பது குறிப்பிடத்தக்கது'

## மலையகத்தில்

# கல்வி அதிகாரிகள் இனரீதியாகச் செயற்பாடு

தோட்டப் பாடசாலைகள் தேசியயமயமாக்கப்பட்டபிறகு மலையகமாணவர்களின் கல்வியில் ஓரளவு வளர்ச்சி காணக்கூடியதாக இருக்கிறது எனினும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் இன அடிப்படையில் செயல்படுவதன் காரணமாக முன்னேற்றத்தைக்காணமுடியவில்லை என்று தொழிலாளர் தேசிய சங்க அரசியல் பிரிவின் சார்பில் தேசியக்கல்வி ஆணைக்குழுவிற்கு மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் பி.வி.கந்தையா அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலவசக்கல்வி, அன்னை மொழிக்கல்வி போன்ற மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் தமிழ்மக்களின் கல்வியில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நினைவு கூருகின்றோம்

## 1992-02-10

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - யாழ். வீதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு காட்டுக்குள் போட்டு எரிக்கப்பட்ட 3 பொது மக்கள்

தம்பலகமத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ்ப்பொது மக்கள்

1987ஆம் ஆண்டு தொண்டமானாறு சிறிலங்காப் படையினரின் காவலரண் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**2-ம்லெப்.ரவி/பூலோகம்** (முத்தையா தங்கத்துரை-முள்ளியான்,வெற்றிலைக்கேணி)

பூநகரியில் சிறிலங்காப்படையினரின் சுற்றி வளைப்பின்போது வீரச்சாவெய்திய

**விசு** (நமசிவாயம் சித்திரவேல் - 4-ம்கட்டை, பூநகரி)

இதே ஆண்டு தவறுதலாக ஏற்பட்டவெடி குண்டு விபத்தில் எம்மைப்பிரிந்த

★ **பிரான்சிஸ் மனோகரன்** (பெரியவிளான்)

1989ஆம் ஆண்டு பேசாலையில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் காண்டீபன்** (சின்னத்துரை கேதீஸ்வரன்- உயிலங்குளம், மன்னார்)

**லெப்.சௌகான்** (மரியதாஸ் குலாஸ்-'தோமஸ்புரி' வங்காலை, மன்னார்)

**2-ம்லெப். செலஸ்ரின்|பொஸ்ரின்** (சந்தியோகு சூசை சற்குரூஸ் - பட்டித்தோட்டம், மன்னார்)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 பொதுமக்கள்

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய

**ஆனந்தராசா** (சிதம்பரப்பிள்ளை சரவணன் - வட்டுவாகல், முல்லைத்தீவு)

1991ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**துஷ்யந்தன்** (வசிட்டன் மோகனராசா-ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

நொச்சி மோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கருணா** (சின்னத்தம்பி பிரேம்குமார் - இல. 78, 1-ம் படிவம், சேமமடு, வவுனியா)

பறநட்டகல்லில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**வரதன்** (மயில்வாகனம் சத்தியசீலன் - 12-ம் கட்டை, புளியங்குளம்)

**பிறேமன்** (உதயகுமார்-சின்னத்தம்பனை, வவுனியா)

இதேசம்பவத்தின் போது விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**மகான்** (பெருமாள், விஜயசுந்தரம் - பதுளை)

**2-ம்லெப்.ஜனா** (விசுவலிங்கம் விஜயகுமார் - ஒட்டிசுட்டான் வீதி, சாளம்பன்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3907)

# புதிய உலக ஒழுங்கும் தமிழீழப் பொருளாதாரமும்

(நேற்றைய தொடர்ச்சி)

## பொருளாதாரக் கொள்கைகள்

எமது பொருளாதார அமைப்பு எப்படி அமைய வேண்டும் எனத் தீர்மானித்த பின் அதற்குள்ளாகப் பொருளாதாரக் கொள்கைகள் சிலவற்றையும் தீர்மானித்தாக வேண்டும். எமது பொருளாதாரம் முழுவதுமாகத் திறந்த பொருளாதாரமா? அல்லது ஓரளவு மூடிய தன்மையுடன் கூடியதா? விவசாயம் சார் பொருளாதாரமா? கைத்தொழில் மயமானதா? சுயசார்பு இலக்குள்ளதா? அல்லது வர்த்தகத்தை முதன்மைப் படுத்தியதா? சர்வதேசப் பொருளாதாரத் தொடர்பு சார்ந்த கொள்கைகள் எவ்வாறானவை? பிராந்திய ஒத்துழைப்பு கொள்கையதா? போன்ற பல விடயங்களையும் தீர்மானித்தல் வேண்டும்.

மூன்றாம் மண்டல நாடுகளைச் சார்ந்த திறந்த பொருளாதாரங்களில் பல் தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் பல துறைகளிலும் ஊடுருவியுள்ளது. சுயமான பொருளாதார முயல்வுகளுக்குத் தடையாயுமுள்ளன. புள்ளி விபர ரீதியில் தென் கொரியா, தாய்வான், தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் செழிப்பு நிலையைச்சிலர் குறிப்பிடினும் சர்வதேச அரசியற் பின்னணி இதற்குக் காரணமாவதுடன் குறிப்பிட்ட இவ்வெற்றியின் பயன்கள் உண்மையில் அந்நாட்டு மக்களிடம் முழுமையாகச் சென்றடையாமையை பேராசிரியர் அஸல் ஜி. அகன் பெக்யன் போன்றோர் விளக்கியுள்ளனர். அதே மாதிரி மூடிய பொருளாதாரக்கொள்கையைக் கையாண்ட நாடுகள் மூலதனப் பாய்ச்சலின்மை, தொழில் நுட்பவியல் ஆற்றற் குறைவு, குறுகியசந்தை வசதி, பொருள் பற்றாக்குறை, உற்பத்தித் திறனின்மை போன்ற பல நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. எனவே அரசியல் ஸ்திரம், தெளிவான பொருளாதாரக் கொள்கைகளுடன் அர்ப்பணிப்பு மிக்க அரச கட்டுப்பாடுடன் கூடிய ஓரளவு திறந்த ஒரு பொருளாதாரக் கொள்கை வரவேற்பிற்குரியது.

தன்னிறைவுப் பொருளாதாரம் அல்லது சுயசார்புப் பொருளாதாரம் எனும் கருதுகோள் காலாவதியாகிவிட்டது எனப் பொதுவாகப் பல பொருளியலறிஞர்கள் கூறியுள்ளனர். இந்தியா, சீனா, அமெரிக்கா, சோவியத் போன்ற பெரிய நாடுகள் பரவலான வளங்களைக் கொண்டிருப்பதால் சிலவேளை அங்கு இக்கொள்கைகள் சாத்தியமாகக் கூடுமேயாயினும் தமிழீழம் போன்ற சிறிய நாடுகளுக்கு இது பொருத்தமற்ற கருதுகோள் என்பது உண்மையே எனின் பேராசிரியர் ஜேம்ஸ் பெட்ராஸ் போன்ற பல முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூறுவது போல் இருக்கும் பிரதான வளங்களில் கூடிய முதலீடுகளைக்கொண்டு வர்த்தக விருத்தியூடான செழிப்பு எனும் கொள்கையும் ஆபத்தானது என்பதை டிரினிடாட்-டொபாகோ தீவின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. எண்ணையையும் அதனோடிணைந்த கைத்தொழில்வர்த்தகத்தையும் இலக்காகக் கொண்டியங்கிய இந்நாடு 1980 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட எண்ணை விலை வீழ்ச்சியுடன் குழப்பமடைந்த பொருளாதாரமாகியதுடன் அதன் 200 ஆயிரம் கோடி டொலர் வெளிநாட்டு ஒதுக்குகள் 1989 ல் 2 கோடி டொலராகக் குறைந்தது. மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் சொல்லுக்கு ஆட வேண்டிய நிர்ப்பந்தத்தால் 30% விதத்திற்கும் மேற்பட்ட பணப் பெறுமதி இறக்கத்தையும் செய்தது. எனவே, எமது பிரதான உணவுத்தேவைகளிலாவது ஓரளவு தன்னிறைவு காணக்கூடியதாக எமது விவசாயத்துறையை விருத்தி செய்வது பிரதானமானது. திரு. வரதராசன் ''ஈழநாதம்'' பத்திரிகையில் தமிழீழ விவசாய அபிவிருத்தி குறித்துக் கூறியமை இங்கு மிகவும் பொருத்தமானது என நினைக்கிறேன். எனினும் விவசாயத்துறைக்கு அப்பாலும் நவீன உலக பொருளாதாரங்களுடன் நின்று பிடிக்கக்கூடிய வகையில் கைத்தொழில், வர்த்தகம் பொருளாதார தகவற் றொடர்பு சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட வேண்டியதும் அதற்கான மூலதனம், தொழில் நுட்பம், சந்தை போன்றவற்றைத் தேடும் வண்ணம் பொருளாதார அரசியற் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

ஏலவே கூறியபடி பொதுவான உலகப்பேச்சுக்கு தெற்கைப் புறமொதுக்க வாய்ப்பிருப்பதால் பேராசிரியர் சாமிர் அமின் கூறும் பிராந்தியபொருளாதார ஒத்துழைப்புக் கொள்கை குறித்தகருதுகோள்களை ஆய்வுக்குட்படுத்தலும் பயன் தரலாம்.

## போர்க்காலப் பொருளாதார நடவடிக்கைகள்

மேற்குறித்தஅமைப்புக்கள், கொள்கைகள் சார்ந்த தீர்மானங்களை எடுத்தபின் அதற்கேற்றவகையான பொருளாதார நடவடிக்கைகளை முழுமையான வகையில் மேற்கொள்ள இன்றைய போர்க்காலச் சூழ்நிலை இடம்தராது என்பது தெரிந்ததே. எனினும் இக் கொள்கைகள், கோட்பாடுகளுடன் முரண்படாத வகையில் - பெருமளவிற்கு ஒத்துப் போகும் வகையில்- இன்றைய சூழ்நிலைக்கேற்ற பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமானதாகும். போர்க்காலப் பொருளாதார நெருக்குதல்களின் உடனடித் தீர்வாக சில குறுகியகால நடைமுறைத் தீர்மானங்களை எடுக்கும் போது எமது நீண்ட காலப்பொருளாதாரத்தேவைகளுக்குரிய வளங்கள் திட்டமற்ற முறையில் விரயம் செய்யப்பட ஏதுவாகலாம். பலநாடுகளின் அனுபவங்கள் இதை எடுத்தியம்புகின்றன எனவே தான் முதலில் தமிழீழப்பொருளாதார அமைப்பு, கொள்கைகளை நீண்டகால நோக்கில் வரையறுப்பதும் பின்னர்அதற்கேற்ற வகையில் அல்லது அதனுடன் பெருமளவு முரண்படாதவகையில் இன்றைய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதும் முக்கியமாகின்றது.

அரசியல் தலைமைவகிக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளும், பொருளியலறிஞர்களும், தமிழீழ ஆய்வுநிறுவனம், ஏனைய அரசு சார் அரச சார்பற்ற நிறைவேற்று நிறுவனங்களும் இந்நடவடிக்கைகள் யாவை என்பதைக் கூட்டாகத் தீர்மானித்தல் பயன் மிக்கதாகலாம். மேலும் இவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள், திட்டங்கள் நடைமுறைப்படிகள் என்பன கூடியளவிற்கு ''மக்கள் பங்கேற்றலுக்கு இடமளிப்பதாயிருப்பின் வெற்றிகரமான விளைவினைக் காணலாம்' இவ்வகையில்பின்வரும்துறைகளை உள்ளடக்கியதாக எடுக்கப்படும் தீர்மானங்கள் இருப்பது வரவேற்பிற்குரியது.

அ) விவசாயத்துறையில்முக்கியமாக நெல், உப-உணவுப் பயிர்ச் செய்கையில் தன்னிறைவுக்கான திட்டங்கள் இத்துடன் உரம், கிருமிநாசினிக்கான மாற்று மூலங்கள் குறித்த திட்டங்களும்.

ஆ) சிறுகைத்தொழில், குடிசைக்கைத்தொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள். (உதாரணமாக பனம்பொருள் கைத்தொழில் உற்பத்தி, சவர்க்கார உற்பத்தி, வாழைநார்ப் பொருள் உற்பத்தி, உர உற்பத்தி, தும்புத்தொழில், காகித உற்பத்தி, செங்கல் உற்பத்தி போன்றன.)

இ) சிறியளவிலான இயந்திரத் தொழில்நுட்பவிருத்திக்கான ஊக்குவிப்பு; வலுப் பொருள் தட்டுப்பாடு இருப்பதனால் உற்பத்தித்திறன் குறைந்ததெனினும் வேறுமாற்றீடுகளைக் கண்டறிதல். உதாரணமாக கழிக்கப்பட்ட மரக்கறிகள் ஏனைய தாவரங்கள் என்பவற்றிலிருந்து எண்ணை உருவாக்கல் போன்றன. எம்மிடையே வாழும் பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் இதற்குப் பெருமளவு பங்களிப்பினை நல்க முடியும்.

ஈ) ஆயுர்வேத மூலிகைவளர்ப்பும் ஆயுர்வேத வைத்திய விருத்தியும்.

உ) சிக்கனப் பாவிப்பு முறைகள் பிரயீட்டுப் பொருள்கள் (என்பவற்றைத் தட்டுப்பாடான பொருள்களுக்குக் கண்டுபிடித்தலும் பிரசாரப்படுத்தலும், இம்முயற்சிகளுக்கான ஊக்குவிப்பும்).

ஊ) மீன்பிடித்துறை விருத்தியும் சந்தைப்படுத்தல் வசதிகளும்.

எ) கிராமந்தோறும் சுகாதாரக் கல்வி வழங்கல்.

## போர்க்காலப் பொருள்கள் சேவைகள் பங்கீடு

போர்க்காலத்தில் பொதுவாகப் பொருள்கள், சேவைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுதல் வழமையேயாயினும் சகலருக்கும் ஓரளவிற்காவது உணவு கிடைப்பதற்கான ஏற்பாட்டினை நிர்ணயித்தல் பிரதானமானது எனினும் கொள்கையளவில் சுலபமான இக்கூற்று நடைமுறையில் பல சிக்கல்கள், சிரமங்களைக்கொண்டுள்ளது உணவுப் பங்கீட்டை உறுதிப்படுத்தவும் செயற்கையான விலையேற்றங்களைத் தடுக்கவும் சில கட்டுப்பாடுகளைக் கடுமையாக அமுல் செய்கையில் அது கள்ளச்சந்தைக்கும்பதுக்கலுக்கும் செயற்கையான பெரும் பொருள் தட்டுப்பாட்டுக்கும் வழிவகுப்பதுடன் வெளியிலிருந்தான பொருள்களின் வரவையும் கடுமையாகப்பாதிக்கும் அதே நேரத்தில் கட்டுப்பாடற்ற சந்தைமுறைமையைஅனுமதிக்கின் உழைப்புச் சக்தி, வாய்ப்புக்கள் குறைந்த ஒருபகுதி மக்கள் பலமாகப் பாதிக்கப்படுவர். எனவேஓரளவு திறந்த சந்தை நிலையை அனுமதிக்கும் அதேநோத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ளோருக்கு மலிவுவிலையில் பொருள்களைப் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தகத் திணைக்களங்கள் போன்ற அமைப்புக்களூடாக விநியோகிக்கும் ஒரு திட்டம் முன்மொழியப்படக்கூடியது. ஸ்ரீலங்காவின் கணக்கீட்டை நாம் தவிர்த்து, புதிதாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளோரைக் கணக்கெடுத்து இதனை அமுல்படுத்த வேண்டும். பழைய கணக்கெடுப்பில் வசதியுள்ளோர் பலர் (உதாரணமாக வெளிநாட்டு வருமானம் உடைய குடும்பங்களும்) உள்ளடக்கப்பட்டுள்ளனர். அவர்களை விலக்கும் அதேநேரத்தில் யுத்த நிலையால் தொழில் வாய்ப்புக்களை இழந்து வறுமை நிலைக்கு வந்துள்ளவர்கள் சேர்க்கப்படவும் வேண்டும். தவிர கப்பல் மூலம் வரும் உணவின் ஒரு தொகுதியை இவர்களுக்கு விநியோகிக்கலாம்.

## ஆய்வுகளும் செயற்றிட்டங்களும்

தமிழீழப் பிரதேசத்தின் பொருளாதார ரீதியான உள்ளார்ந்த ஆற்றல்கள், வளங்கள் ஆகியவற்றை இனங்காணவும், விருத்தி செய்யவுமாகத் தொடர்ச்சியான ஆய்வுகள் அவசியமானதாக உள்ளதுடன் இது உடனடியாகத் தொடங்கப்படவும் வேண்டியுள்ளது. ஏனெனில் மேலே கூறப்பட்ட சகலவிதமான தீர்மானங்கள் திட்டங்கள், நடைமுறைகள் என்பவற்றிற்கு இது அடியத்திவாரமாக அமையும். முழுமையான ஆய்வின் பின் இவ்வாறான தீர்மானங்கள், திட்டங்களை எடுப்பது நல்லதேயாயினும் எமது தேசத்தின் இன்றைய நிலை, தேவைகளைக் கவனத்திற் கொள்ளும் போது கண்டறியப்பட்டுள்ள மூலவளங்கள், உள்ளார்ந்த ஆற்றல்கள், வினைத் திறன்கள் என்பவற்றினடிப்படையில் முதலில் தீர்மானங்களை எடுப்பதும் தொடர்ச்சியான ஆய்வுகளின் பெறுபேறுகளுக்கமைய இத்தீர்மானங்கள், செயற்றிட்டங்களைச் சீர்செய்தல் அல்லது சரிப்படுத்தலும் தொடர்ச்சியாக நிகழ வேண்டியதொன்றாகும். இவ்வாறான ஆய்வுகள் உள்ளார்ந்த ஆற்றல்கள், வளங்களைக் கண்டறிதல், விருத்தி செய்தல் என்பவற்றுடன் மட்டும் நின்றுவிடாது எமது பொருளாதார நடவடிக்கைகளையும் செயற்றிட்டங்களின் போக்கையும் சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தவும் புதிய வளர்ச்சி நிலைகளை எய்தவும் உதவுதல் வேண்டும். (தமிழீழத்தின் பொருளாதாரத்தின் பிரதான வளங்கள், தேவைகள் எனத் தற்போது இனங்காணப்பட்டுள்ள பின்வரும் துறைகளில் முதலில் ஆய்வு முயற்சிகளைத்தொடங்கலாம்).

அ) விவசாய முயற்சிகளும் நிலப்பயன்பாடும்.

ஆ) கால்நடை வளர்ப்பு. உரத்தயாரிப்பு, வலுஉற்பத்தி

இ) நீர்வளப் பாதுகாப்பும் முகாமையும்.

ஈ) கடல்வள அபிவிருத்தி, நன்னீர் மீன்-இறால்வளர்ப்பு.

உ) கைத்தொழில் விரிவாக்கம் (இல்மனைட், சுண்ணக்கல், உப்பு, களிமண், வாழை, பனை, தெங்குப்பொருட்கள், தாவர இலை விதை போன்ற மூலப்பொருள்களின் அடிப்படையில்).

ஊ) மனிதவள அபிவிருத்தி (கல்வி முறை - பாடத்திட்ட மாற்றம், தொழில் நுட்பக் கல்வி, மண்சார்ந்த அறிவியல் நோக்கு).

எ) போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம் போன்ற உற்பத்தியுடனிணைந்த பொது வசதிகள் பற்றிய ஆய்வு.

ஏ) வங்கித் தொழிலமைப்பு உருவாக்கம்.

ஐ) உள்நாட்டு மூலதனத் திரட்சியும் வெளியிலிருந்தான மூலதனப் பாய்ச்சலும் (வெளிநாட்டுதவி பெறல், வெளிநாட்டிலுள்ள எம்மவர்களின் வருமானங்களை எம் தேசத்துள் பாய்ச்சல், ஏற்றுமதியதிகரிப்பு இறக்குமதிக்குறைப்பு போன்ற சாதகமான வர்த்தக முயற்சிகள், வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் பற்றிய ஆய்வுகள்)

ஒ) புனர் வாழ்வும் புனரமைப்பும் (மக்கள் புனர் வாழ்வு, நகரப்புனரமைப்பு, பொதுத்துறைப் புனரமைப்பு போன்ற துறைகளில் சாத்தியமான வழிகளைக் கண்டறியும் ஆய்வு).

ஓ) தேசப்பாதுகாப்பு, எமது பொருளாதார முயற்சிகளுக்கான அனுகூலம், அரச ஸ்திரம், சர்வதேச - பிராந்திய வர்த்தகம் போன்ற துறைகளுடன் இசைந்த வகையிலான வெளிநாட்டுக் கொள்கைகள் உறவுகள் சம்பந்தமான ஆய்வு முயற்சிகள்.

ஔ) மேற்கத்தைய பிரதிபண்ணலல்லாத, எமது கலாசாரம், பாரம்பரியம், மன உணர்வுகள், உயர் வினைத்திறன், விரயமின்மை அர்ப்பணிப்பு, மக்கள் பங்கேற்பு சார்ந்த முகாமைத்துவ நிர்வாக அமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆய்வுகள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத்திட்ட விளக்கம் பற்றிய பிரசுரமான 'சோஷலிசத் தமிழீழம்'' எனும் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 16) ''தமிழீழத்தின் சகல பிராந்தியங்களிலும் சர்வகலாசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்களை அமைத்து. இளம் பரம்பரைக்கு விஞ்ஞான, தொழில் நுட்ப, தொழில் சார்ந்த கல்வி புகட்ட எமது இயக்கம் திட்டமிட்டிருக்கின்றது. சிறுவர்களுக்கான கல்வி கட்டாயமாக்கப்படும். தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவான நிபுணத்துவத்தையும் அறிவுத்துறைகளையும் உருவாக்கும் வகையில் புரட்சிகர கல்வித்திட்டம் ஒன்றை எமது இயக்கம் செயற்படுத்தும். விஞ்ஞான உலகப் பார்வையும் சமூகப் பிரக்ஞையும் சமத்துவ உணர்வையும் வளர்க்கும் நோக்கில் பாடத்திட்டங்கள் அமைக்கப்படும்''

மேற்குறித்த கல்வியமைப்பு முறை வெற்றிகரமாக அமுல் படுத்தப்படுகையில் தொடர்ச்சியான பொருளாதார ஆய்வு மேலும் வலிவு பெறுவதுடன் நிச்சயத்தன்மையுடன் கூடிய செயற்றிட்டங்களின் வீறு நடையையும் பொருளாதாரச் செழிப்பையும் காணக்கூடியதாக இருக்கும்.

**த.அன்பானந்தன்**

(முற்றும்)

## கடையில் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிரபல்யம் வாய்ந்த கடை ஒன்றின், பாரிய பூட்டுக்கள் அண்மையில் திருடர் கோஷ்டியினரால் உடைக்கப்பட்டு பெறுமதியான பலபொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பந்தமாகக் கடை உரிமையாளர் காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளார் (24)

## மீனவர் மீது துப்பாக்கிச்சூடு

(மண்டைதீவு)

நேற்றுக் காலை6.30 மணியளவில் கல்முனை பந்தலடியில் இருக்கும் இராணுவத்தினர் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி 50கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் சில மீனவர்கள் தங்கள் தொழில் நடவடிக்கைகளைக் கைவிட்டு கரைதிரும்பிவிட்டனர்.

# சிறிலங்காவிற்கு ஆயுத விநியோகத்தை தடுக்க கனடா முயற்சிக்க வேண்டும்

## இலங்கை வந்த கனேடியக்குழு கோரிக்கை

சிறிலங்காவிற்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யபபடுவதை நிறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் கனடா கோர வேண்டும் எனவும், சிறிலங்காவிற்கான ஆயுத ஏற்றுமதி முற்றாக நிறுததப்படுவதை கனடா உறுதி செய்ய வேண்டும் எனவும் அண்மையில் இலங்கை வந்து திரும்பிய கனேடியமனித உரிமைகள் குழு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த புதனன்று ஒட்டாவாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக்குழுவினரின் சிபாரிசுகள் வெளியிடப்பட்டன. அந்தச் சிபாரிசுகளில் மேலும் சில வருமாறு;

★ அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்லக்கூடிய சர்வதேச கண்காணிப்புடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் உடனடியாக இணங்க வேண்டும்.

★ விரைவாக இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான தன்னுடைய திட்டத்தை முன்வைத்து, அதற்குத் தெளிவான ஒரு நேர அட்டவணையையும் முன்வைத்து, தன்னுடைய நம்பகத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

★ சிறிலங்கா அரசு பயங்கரவாத தடைச்சட்டம், அவசர காலச்சட்டம் ஆகியவற்றை நீக்க வேண்டும்.

★ மனித உரிமைகள்தொடர்பான சர்வதேச மன்னிப்புச் சபையின்32 ஆலோசனைகளும் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் அது கண்காணிக்கப்பட வேண்டும்.

★ சிறிலங்காவில் மனித உரிமைகள் நிலை தொடர்பாக மனித உரிமைகளுக்கான ஐ.நா. கமிசனின் கூட்டத் தொடரில் கடுமையான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமாறு கோர கனடா தலைமை தாங்க வேண்டும்.

★ இலங்கையில் தற்போது நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு, கனடாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ளவர்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாக கனடா வெளியேற்றக் கூடாது

★ கனடாவில் ஒருவர் அகதியாக அங்கீகரிக்கப் பட்ட இரண்டு மாதத்தில் அவரது குடும்பத்தினர் ஒன்று சேர்வதற்கான வரையறை உருவாக்கப்படல் வேண்டும். இதனைச் செய்வதற்கு தேவையான சகல வளங்களையும் கனடா உடனடியாக ஒதுக்க வேண்டும்.

★ இலங்கைக்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ள அகதிகளின் தேவைகளுக்கு நீண்ட கால, குறுகிய கால ரீதியில் அதிமுக்கியத்துவத்தை கனடா தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

★ இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் பொறுப்பேற்கக கூடிய விதமாக ஐ. நா. அகதிகளுக்கான உடன்படிக்கையை இந்தியா ஏற்றுக்கொள்ளச்செய்யமுயல வேண்டும்.

# பெண்கள் மீது பாலியல் வன்முறை; வாக்கு மூலத்திற்கான வழிமுறை

## சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

இராணுவமும், பொலிஸும் பாலியல் வன்முறை மற்றும் கற்பழித்தல் மூலம் பெண்களைப் பயப்படுத்திச் சம்மதிக்க வைத்து வாக்குமூலம் பெறுதல் இன்று உலகம் முழுவதும் ஒரு வழககமாகி விட்டது என்று சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அரசுகள் இவற்றைக் கண்களை மூடிக்கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதாக மன்னிப்புச் சபை கூறுகிறது.

கற்பழித்தல் பாரதூரமான மனித உரிமைகள் மீறல் செயல் என்பதை ஒத்துக் கொள்ளப் பல அரசுகள் கண்டிப்பாக மறுத்து வருகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. பாலியல் வன்முறை மற்றும் கற்பழித்தல் குறித்துப் பலமுறைப்பாடுகள் தம்மிடம் உள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இராணுவமும், பொலிஸும் தாம் கைது செய்த பெண்களைச் சித்திரவதை செய்வதற்கான ஒரு ஆயுதமாகவே பாலியல் வன்முறையை உபயோகிக்கின்றன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

# பஞ்சாலைக்கு சூரியஒளியில் கொதிக்க வைத்த நீர்

(சென்னை)

சூரிய ஒளி மூலம் தண்ணீரைச் சுடவைத்து அதனைப் பஞ்சாலைக்கு பயன்படுத்தும் முறையொன்று முதன்முறையாக தமிழகத்தின் நடைமுறைக்கு வந்துள்ளது. தேசிய பஞ்சாலைக் கழகத்தில் தமிழ்நாடு-பாண்டிச்சேரி பிரிவு எரிபொருளைச் சேமிப்பதில் இந்தப் புதிய திருப்பத்தைக் கண்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி நாளொன்றிற்கு எட்டாயிரம் லீற்றர் தண்ணீர் சுத்தப்படுத்தி சூடுபடுததி பஞ்சாலைக்கு அனுப்பப்படும். இந்தக் கொதிகலனை அமைப்பதற்கு எட்டரைலட்சம் ரூபா செலவாகியுள்ளது.

# இந்தியா அணு ஆயுதம் கொண்டிருக்க வேண்டும்

## பாரதீய ஜனதா கோரிக்கை

அணு ஆயுதம் வைத்திருப்பதாக பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டிருப்பதை அடுதது இந்தியாவும் அணுஆயுதத்தை தனது கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டுமென பாரதீய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி கூறியுள்ளார். புதுடில்லியில் இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் மக்களிடம் நம்பிக்கை உணர்வைத் தோற்றுவிக்கக் கூடிய வகையில் அரசு செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தொண்டமான் குறித்து அவதானம் தேவை

(கொழும்பு)

தொண்டமானையிட்டு நாம் கவனமாக இருக்க வேண்டும் என்று வண. கெப்பிட்டியாகொட சிறிவிமால நாயக்க தேரர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்.

விடுதலைப் புலிகள் தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதற்காகப் போராடி வருகிறார்கள். அதற்காக அவர்கள் எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பாதுகாப்புப் படையினர் அவர்களை அடக்கும் பணியில் வெற்றி பெற்றுவரும் இந்த நிலையில் அமைச்சர் தொண்டமான், சமாதானம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வளிக்க முயன்று வருகிறார் எனவும் தெரிவித்தார்.

# யாழ்.பிராந்திய செயலகம் இன்று திறந்து வைக்கப்படும்

(கொழும்புத்துறை)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய செயலகம் இன்று 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை இல 4, பழைய பூங்கா வீதியில் உள்ள புதிய கட்டடத்தில் செயல்பட உள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா.மாணிக்கவாசகரால்இன்று திங்கள் காலைஇப்பிராந்தியச் செயலகம் திறந்து வைக்கப்பட உள்ளது. (24)

# செஞ்சிலுவைச் சங்க விசேட பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணப் பிரிவின் விசேட பொதுக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் இன்று திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு சங்கத் தலைவர் டாக்டர் எஸ். நச்சினார்க் கினியன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் 1992 யாழ். கிளை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், கலந்து கொள்ளவிருக்கும் 30 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமாக ஆராயப்பட உள்ளதாகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (24)

# தமிழகத்தில் வறுமையின் கொடுமை பெண்களை அடகுவைக்கும் அவலம்

தமிழ் நாட்டில் அடகுவைக்கப்படும் பொருள்களில் பெண்களும் இடம் பெற்றுள்ளனர் என்பது தெரியவருகின்றது. அதாவது வறுமையின் கொடுமையால் தங்கள் மனைவியரை தமது இனத்தவர்களிடமே அடகு வைப்பது மதுரை நகரின் ஒரு பகுதியில் நடைமுறையிலுள்ளது. வறுமையின் கொடுமை காரணமாக நடைமுறையிலிருக்கும் இவ்வழக்கம் பற்றி கிடைக்கும் தகவல்கள் அதிர்ச்சியூட்டுபவையாக உள்ளன.

'கொடுமையாகத்தான் இருக்கு! என்ன செய்யிறது பணம் இல்லாம எப்படி வாழ்க்கை நடத்துகிறது?' என்கிறார் தனது மனைவியை அடகு வைத்து விட்ட ஆடவர் ஒருவர். இதேவேளை அடகு வைக்கப்பட்ட பெண் ஒருவர் கருத்து வெளியிடுகையில் 'எப்படியாவது நம் வீட்டில் வறுமை தொலைந்தால் போதும்' எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு அடகு வைக்கப்படும் பெண்கள் அடகு பிடிப்பவர்களால் நடத்தப்படும் விதம் மிகவும் கேவலமானதாகும். அதேவேளை கணவனோ, அல்லது குழந்தைகளோ அடகு வைத்திருப்பவரின் வீட்டிற்குச் சென்று இப்பெண்களைச் சந்தித்துப் பேச மட்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருகிறது.

இதை விடவும் நிரந்தரமாக விற்கப்படுவது, வருடக் குத்தகைக்கு விடப்படுவது போன்ற செயல்களும் இத்தகைய வருமானம் குறைந்த மிகவும் ஏழ்மையான நிலையிலுள்ள மக்களிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் இவ்வாறு அடகு பிடிக்கப்படும் பெண்கள், கடைக்குப் போய் வருவது, வீட்டு வேலை செய்வது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதோடு சில சமயம் கூலி வேலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

# குழந்தைகளுக்கு இலவச பால்மா

தீவகத்தில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளின் அனர்த்தங்களால் வெளியேறி யாழ்ப்பாணத்தில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் ஐந்துவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேலணைபிரதேச சபையால் இலவசமாக லக்டோஜன்பால்மா வழங்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிவடக்குப் பிரிவின் பிரதிச் செயலாளரும் வேலணை பிரதேசசபையின் விசேட ஆணையாளருமான திரு.இ. இளங்கோவன் இப்பால்மா விநியோகத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது(41)

## கண்டெடுக்கப்பட்டது

குப்பிளான் சமாதி கோயிலடிப் பகுதியில் வதியும் மகேந்திரன் றஞ்சனாதேவி என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# ஜம்மு-காஷ்மீர் விவகாரம்; இந்.அனைத்துக்கட்சிகூட்டம்

ஜம்மு-காஷ்மீர் நிலைமை பற்றி ஆலோசனை கலப்பதற்காக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒன்றை நாளைகூட்ட உள்ளார்.

செவ்வாய்க் கிழமை எல்லைக் கோட்டைத் தாண்டப் போவதாகஜம்மு-காஷ்மீர்விடுதலை முன்னணி மிரட்டல் விடுத்திருக்கும் நிலையில் இந்த முக்கியமான கூட்டம் நடைபெறுகிறது.

இதேவேளைஜம்மு-காஷ்மீர் நிலைமை தொடர்பாக விவாதிக்க பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சிமாநாட்டில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இந்தஅழைப்பைஏற்று செல்வி ஜெயலலிதா புதுடில்லி பயணமாவார் என்று தமிழகஅரசின் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.

# இல. திரும்பிய அகதிகள் மாத்தளையில் அலைச்சல்

தமிழ் நாட்டிலிருந்து அண்மையில் இலங்கை திரும்பிய வடகிழக்கு அகதிகள் சிலர் மாத்தளைப் பகுதியில் வீடு தேடி வந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கன்னியா, கிண்ணியா அன்பு வழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐம்பது குடும்பங்கள் மாத்தளைப் பகுதியில் வீடு தேடி அலைவதாகத் தெரியவந்துள்ளது. இக்குடும்பத்தவர்களில் பெரும் பாலானோர் பெண்களும், வயோதிபர்களும் ஆவர்.

இக்குடும்பங்கள் தங்குவதற்கு இடமின்றி கோவில்களிலும், பொது இடங்களிலும் பொழுதைக் கழித்து வரும் இவர்கள். கோவில்களில்நடைபெறும் அன்ன தானங்களிலேயே மதிய உணவுக்கு நம்பியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## பணமாக ஒய்வூதியம்

வேலணை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு 10 . 02 . 92 முதல் பணமாக வழங்கப்படும் என்று அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (88)

## சிந்தனைக்கு

எல்லாவற்றிலும் தலையாயுள்ள உன்னத சக்தி; -அது எதுவாயினும் சரி - மனித இனத்தின் விவகாரங்களில் அக்கறை காட்டுகிறது என்று எண்ணுவது அறிவீனம்.

-பிளினி (மூத்தவர்)

ஈழநாதம்

31. மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 10-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஆயுத கம்பனிகளுக்கு ஆசிவேண்டி பிரார்த்தனை

அமெரிக்கா பெருமளவு பொருளாதார உதவிகளைச் சிறிலங்காவிற்கு வழங்கிவருவதன் காரணமாக, அமெரிக்காவிற்கு கடவுளின் நல்லாசிகள் வேண்டி சிறிலங்கா பௌத்த பிக்குகள் பிரார்த்தனை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இப்பிரார்த்தனை தொடர்ச்சியாக ஒருவருடம் வரையில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை வெடித்துக் கிளம்ப முன்னர் பெரும்பாலும் 'சுதந்திரதினத்தன்று' நாட்டிற்கும், மக்களுக்கும் நல்லாசி வேண்டியே பௌத்த பிக்குகள் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது வழக்கமாகும். ஆனால், 1983ஆம் ஆண்டில் தமிழர் தேசிய இனப் பிரச்சினை ஆயுதப்போராட்டமாக வளர்ச்சியடைந்த பின்னர், நாட்டு மக்களுக்கும், ஆயுதப்படையினருக்கும் நல்லாசி வேண்டி வாராந்தம் பிரார்த்தனையும், பிரித் ஓதும் வைபவங்களும் இடம்பெற்றன.

பின்னர் இந்நிலை படிப்படியாக தளர்ந்து, குறிப்பாக 1989ஆம் ஆண்டின் பின்னர் ஜனாதிபதிக்கும், நல்லாசி வேண்டி பிரித்தோதும் வைபவங்கள் தொடங்கப்பட்டன. இதில் மேலும் ஒரு முன்னேற்றம் என்னவென்றால், முன்னர் வாராந்தமாக இருந்தது தற்பொழுது நாளாந்தமாக மாறியதோடு, மக்களுக்கும், ஆயுதப்படையினருக்கும் என்று இருந்த முன்னுரிமை நிலை மாறி ஜனாதிபதிக்கும், ஆயுதப்படையினருக்கும் மக்களுக்கும் என்ற வரிசைக்கிரமம் கடைப்பிடிக்கப்படத் தொடங்கியுள்ளது. அதாவது, மக்களுக்கான பிரார்த்தனை மூன்றாம் கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது ஒருபடி மேலேபோய் உதவிவழங்கும் நாடுகளுக்கும் நல்லாசி வேண்டி பிரித்ஓதுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புத்தபிக்குகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரார்த்தனையானது ஒரு மனிதநேயத்தின் அடிப்படையிலேயோ அன்றி, நட்பின் வெளிப்பாடாகவோ ஆரம்பிக்கப்பட்டதல்ல. உள்நாட்டுப் போரின் காரணமாக, பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சிறிலங்காவிற்குக் கை கொடுத்து உதவியமைக்காக நன்றிக்கடனுக்காகவே இப்பிரார்த்தனை இடம்பெறுகின்றது. அதாவது பேரினவாதிகள் போரைத் தொடர்ந்து நடாத்துவதற்காக அமெரிக்கா வழங்கிய உதவிக்கு நன்றி தெரிவித்து நடத்தப்படுகின்றது.

அவ்வாறு இல்லையானால், பௌத்த பிக்குகள் இலங்கையில் சாந்தியும், சமாதானமும் வேண்டி ஒரு வருட பிரார்த்தனையை ஆரம்பித்திருக்கலாம், அல்லது பல ஆண்டுகளாக போரினால் துன்பத்தை அனுபவித்துவரும் தமிழ் மக்களுக்கு நல்லாசி வேண்டி பிரார்த்தனையை ஆரம்பித்திருக்கலாம். சிறிலங்காவில் உள்ளவர்கள் உண்மையான பௌத்த பிக்குகள் என்றால் அதையே செய்திருப்பார்கள்.

கொல்லாமையையும், அகிம்சையையும் காருணியத்தையுமே பௌத்தம் அடிப்படைத்தத்துவமாகப்போதிக்கின்றது. ஒரு பௌத்த பிக்கு எப்பொழுதும் ஒரு மயில் இறக்கையைக் கையில் வைத்திருப்பார். அதற்கு பௌத்தர் கூறும் விளக்கம்; பிக்குகள் நடந்து செல்லும் இடங்களில், அவர்களின் காலடியில் நுண்ணுயிர்கள் சிக்கி இறந்துவிடக் கூடாது என்பதாகும். ஆதலினால் அவற்றை விலக்குவதற்காகவே அதாவது தட்டி விலத்துவதற்காகவே அம்மயிலிறக்கை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது நுண்ணுயிர்கள் விலக்கப்படும் போது அவற்றிற்கு துன்பங்கள், நோவுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே மென்மையான மயில் இறகுகள் பாவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இன்று பௌத்த பேரினவாதிகள், மயிலிறகிற்குப் பதிலாக ஆயுதங்களையே கையில் ஏந்தியவர்களாகவும், அவற்றை பெற்றுக்கொள்ள உதவியவர்களுக்கும் நல்லாசி வேண்டி பிரார்த்தனை செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள். படுகொலை புரிபவர்கள் பாதுகாப்புடன் இருக்கவேண்டும். மேலும் மேலும் கொலைகளை செய்ய அவர்களுக்கு நீண்ட ஆயுள்வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கின்றார்கள். இதே நிலை மேலும் தொடருமானால், அடுத்த கட்டநடவடிக்கையாக சிறிலங்காவிற்கு ஆயுத விநியோகம் செய்யும் கொம்பனிகளுக்கும், அவற்றின் உரிமையாளர்களுக்கும் நல்லாசியும், நீண்ட ஆயுளும் வேண்டி இப்பிக்குகள் பிரார்த்தனை செய்யக்கூடும். சிறிலங்காவின் பௌத்தத்தின் இன்றைய வளர்ச்சி நிலை இதையே வெளிப்படுத்துகின்றது. பாவம் புத்தபிரான்.

# காஷ்மீருக்குள் நுழையும் முயற்சிக்கு பாகிஸ்தான் அரசு தடை

ஜம்மு-காஷ்மீர் பிரதேசத்தினுள் காஷ்மீர் தீவிரவாத குழுவான காஷ்மீர் விடுதலை முன்னணியினர் பிரவேசிக்கக் கூடாதென பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. பாகிஸ்தான் – இந்தியா ஆகிய இருநாடுகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய பிணக்குகளை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தபோராட்டத்தில் ஈடுபடவிருக்கும் தீவிரவாத குழுவின் தலைவர்கள் தாம் கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக தலைமறைவாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளைஜம்மு-காஷ்மீர் பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்திய - பாகிஸ்தான் வெளியுறவு செயலர் பேச்சு

(டில்லி)

காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப்பகுதியில் இந்தியா–பாகிஸ்தான்ஆகியவற்றிற்கிடையே பதற்றநிலை நீடித்துவருகின்ற போதிலும், இந்திய- பாகிஸ்தான் வெளியுறவுச்செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுக்கள் தொடரும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் மாதங் சிங் சோலங்கி நேற்று முன்தினம் அறிவித்தார் அவர் மேலும் கூறுகையில் இப்பேச்சு வார்த்தைகளின் போது காஷ்மீர் விவகாரம் ஆராயப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக இந்திய- பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்களின் கூட்டம் கடந்த நவம்பரில் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது தெரிந்ததே.

## எவரும் எல்லை கடப்பதை அனுமதிக்கப் போவதில்லை

### பாக். அமைச்சரவை முடிவு

(டில்லி)

காஷ்மீரின் எல்லைக்கட்டுப்பாட்டுப் பகுதியை கடப்பதற்கு எவருக்கும் அனுமதி அளிக்கப்பட மாட்டாதுஎன்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் தலைமையில் கூடிய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதில மேலும் காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கு அரசியல் மற்றும் தார்மீக ரீதியில் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கும் அதே நேரத்தில் இத்தகைய எல்லை மீறிய ஊடுருவல் தடுக்கப்பட்டாக வேண்டும் என்றும்கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இந்த நிலையை அடுத்து ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமானுல்லாகான் பாகிஸ்தான் அரசினால் கைது செய்யப்படலாம் எனவும், அவர் தலைமறைவாகியுள்ளதாகவும் இஸ்லாமாபாத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஐ. நா. அமைப்பில் சீர்திருத்தம் இடம் பெறும்

(ஜெனிவா)

போர்க் குமுறல் முடிந்திருக்கும் இத்தருணத்தில் உலகில் ஐக்கிய நாடுகள் அமைப்பு மேலும் முக்கியமான பங்கு வகிக்கும் வகையில் சில சீர்திருத்தங்களைச் செய்யப்போவதாக ஐ. நாவின் தலைமைச் செயலாளர் திரு. பூட்டர்ஸ் காலி கூறியுள்ளார்.

இரண்டு புதிய அமைதி காப்புத்துறைகளை உருவாக்கி அமைதி காப்புப் பணியில் ஈடுபடப்போவதாகவும், பன்னிரண்டு துறைகள் கலைக்கப்பட்டு அவற்றின் பணிகள் மற்ற துறைகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகவும், மேலும் சில சீர்திருத்தங்கள் செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியா, ஜேர்மனி, யப்பான், பிரேசில், நைஜீரியா ஆகிய நாடுகளையும் நிரந்தர உறுப்பு நாடுகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஐ. நா. செயலாளர் சிபாரிசு செய்துள்ளார்.

## ஐரோ. நாடுகளின் பிரிவினையை அனுமதிக்கப் போவதில்லை

### பிரான்ஸ் - ரஷ்யா இணக்கம்

(பாரிஸ்)

ஐரோப்பாவில் நாடுகள் மேலும் பிளவுபடுவதை அனுமதிப்பதில்லைஎன பிரான்சும் ரஷ்யாவும் இணங்கியுள்ளன. ரஷ்ய ஜனாதிபதி பொரிஷ் யெல்சின் பிரான்சிற்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் போது இவ்வாறு இணங்கிக் கொள்ளபபட்டுள்ளது.

சோவியத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக சோவியத்யூனியனில் இருந்த 15 குடியரசுகள் புதிய சுதந்திர அரசுகளாக உருவாகியமையும் யூக்கோசெலவேக்கியாவில் இருந்து பிரிந்து ஸ்கோவேனியா குரோசியா என்பன தனி நாடாக உருவாகியுள்ளமையும் தெரிந்ததே.

## இரத்தினக்கல் வியாபாரி வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

மல்லவையில் உள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவரின் வீட்டில் இருந்து ஒருதுப்பாக்கி உட்பட நகை, பணம் ஆகியவை ஆயுதம் தாங்கியவர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த வாரம நள்ளிரவு வேளை மேற்படி வீட்டிற்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் வீட்டில் உள்ள அனைவரையும் அறை ஒன்றில் வைத்துப் பூட்டி விட்டு 55000 ரூபா பணம், ஒரு துப்பாக்கி, நகை ஆகியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றிருக்கின்றனர்.

## பிரான்ஸ் - ரஷ்யா நட்புறவு உடன்படிக்கை

(பாரிஸ்)

பிரான்சும் ரஷ்யாவும் நட்புறவு உடன்படிக்கையொன்றில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளன. பிரான்சு அதிபர் மித்தரோங்கும் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சினும் பாரிஸில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேந்திர ஆயுதக் குறைப்பு தொடர்பாக அமெரிக்க - ரஷ்யப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்ட பின்னர் பிரான்சும் அதில் சேர்ந்து கொள்ளலாம் என பிரான்சு அதிபர் மித்தரோங் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு, ஆயுத பரிகரணம், பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் பரவலான தொடர்புகளை ஏற்படுத்த இந்த நட்புறவு உடன்படிக்கை வழி செய்யும் என்று கூறப்படுகிறது.

## குளிரூட்டப்பட்ட பயணிகள் பெட்டி

(கொழும்பு)

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே சேவையிலீடுபடும் ரயில்வண்டியில் குளிரூட்டப்பட்ட பெட்டியொன்று இணைக்கப்படும். கொழும்பு கோட்டையிலிருந்து காலை ஐந்துநாற்பத்தைந்துக்கு புறப்படும் ரயில் வண்டியில் இன்றுமுதல் இந்தக் குளிரூட்டப்பட்ட பெட்டிஇணைக்கப்படும் இதற்கான ஆசனங்கள்முன் பதிவு செய்யப்படவேண்டும் என்பதுதெரிந்ததே.

## ஜே.கே.எல்.எப். முடிவை தள்ளிப் போட வேண்டும்

### - பெனாஸீர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இயங்கும் ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அமானுல்லாகான் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டைக் கடக்கும் தனது முயற்சியைத் தள்ளிப் போடவேண்டும் என்று முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாஸீர் பூட்டோ கேட்டுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானின் செல்வாக்கின் கீழ் உள்ள காஷ்மீரின் ஜனாதிபதி அப்துல் சையூம்கான் இஸ்லாமாபாத்தில் அமானுல்லாகானை சந்தித்து எல்லை தாண்டும் திட்டத்தைக் கைவிடுமாறு கோரியதாகச் சொல்லப்படுகிறது.

## உப்பு கூ. ஊ. சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்களுக்கு 90 ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கும் உரிய போனசும் மிகுதிச் சம்பளமும் 11 ஆம் 12 ஆம் தேதிகளில் வழங்கப்படவுள்ளது. பளையிலுள்ள பிராந்திய அலுவலகத்திலும், முரசுமோட்டையிலுள்ள உப அலுவலகத்திலும் வழங்கப்படுமென பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் வரம்பு மீறினால் தக்கபதிலடி கொடுக்கப்படும்

## -பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

பாகிஸ்தான் வரம்பு மீறினால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவும், பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாரும் பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்கள்.

பிரதமர் நரசிம்மராவ் நேற்றுக் குருவாரியூரில் செய்தியாளரிடம் பேசும்போது, பாகிஸ்தான் தாக்கினால் இந்தியா பதிலடி கொடுக்கும் என்று வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி நேற்று முன்தினம் புது டில்லியில் கூறியதைச் சுட்டிக்காட்டினார்.

இன்று புதுடில்லியில் நடைபெற இருக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு, அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் கருத்துகள் இடம் பெறும் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றார்.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சர் நெல்லூர் செல்லும் வழியில் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளரிடம் பேசும்போது நாட்டைக் காக்க இராணுவம் தயார் நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்திய எல்லைக்குள் ஊடுருவும் எந்தச் செயலும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இந்திய பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை எந்த ஒரு நிலையிலும் சர்வதேசப் பிரச்சினையாகப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் உறுதியாகக் கூறினார்.

## 1989இல் பாகிஸ்தான் அணு வல்லமை பெற்றது

பாகிஸ்தான் அணு ஆயுத வல்லமையை 1989 இலேயே பெற்றுவிட்டது என்று பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் ஷரியத்கான்கூறியுள்ளார். எனினும் அதனை இரகசியமாக வைத்திருந்ததன் மூலம் மேற்கு நாடுகளில பாகிஸ்தானின் மீதான நம்பிக்கைக்கு பங்கம்ஏற்பட்டது முன்னைய பாகிஸ்தான் அரசுகள் இழைத்த தவறை திருத்திக்கொள்ள தற்போதைய நவாப் ஷரீப் அரசு முற்பட்டதன் விளைவாகவே அணு ஆயுதவலிமை இருப்பதை பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டமை ஆகும் என்று பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் ஷரியத்கான் நியூயோர்க் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியுள்ளார்.

## புதிய பொதுநலவாயத்தில் கருத்து முரண்பாடுகள்

(மாஸ்கோ)

ஆயுதப் படைகளின் நிதிவசதி மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதிலும் உள்ள முக்கிய விடயங்களில் உடன்பாடு ஒன்றைக் காண முன்னாள் சோவியத் யூனியன்குடியரசுகளின் பொது நலவாய அமைப்பு தவறிவிட்டது.

இந்த சுதந்திர அரசுகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் மாஸ்கோவில் நடாத்திய ஒருநாள் கூட்டத்தின் பிறகு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ரஷ்யக் குடியரசின் துணைப்பிரதமர் கெனாடி குருப்புவேவ் இவ்வாறு தெரிவித்தார்.

படைகளின் வரையறைகள் பற்றி ஆலோசிக்க இந்தத் தலைவர்கள் அடுத்த வாரத்தில் மீண்டும் சந்திப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார அம்சத்தில் அதிகாரிகள் வகுத்த திட்டத்தை இந்தத் தலைவர்கள் நிராகரித்துவிட்டனர். அயல்நாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் மற்ற உறுப்பு நாடுகளுடன் கூட்டுப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள உக்ரைன் மறுத்துவிட்டது. எனினும் நடப்பாண்டிற்கான உணவு மற்றும் வேளாண் பொருள்களை மத்திய அளவில் இறக்குமதி செய்ய அது இணக்கம் தெரிவித்துள்ளது. மேலும் இறக்குமதிகளை ஒருங்கிணைக்க குடியரசுகளுக்கிடையிலான கமிஷன் ஒன்றை அமைக்கவும்பொதுநலவாயஅமைப்பின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

## சிவப்புக் கொடிகளுடன் மாஸ்கோவில் ஆர்ப்பாட்டம்

(மாஸ்கோ)

மாஸ்கோவின் மத்தியபகுதியில் ரஷ்யஜனாதிபதி பொரிஸ் ஜெல்சினுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாகவும், அவர்கள் செங்கொடிகளை ஏந்திச்சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊர்வலத்தையடுத்து நடந்த கூட்டத்தில்எவரும் எதிர்பார்க்காத வகையில் ரஷ்ய உப ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றினார். ரஷ்ய உப ஜனாதிபதி அலெக்சாண்டர் கொசிககோவ், பொரிஸ் ஜெல்சின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுககப்பட்ட பின் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டவராவார்.

அவர்அங்கு உரையாற்றுகையில் ரஷ்யாவின் ஜனநாயகப் போக்கை ஆதரித்த மக்கள் இப்பொழுது ஆத்திரமும்விரக்தியும் அடைந்துள்ளார்கள் இவ்வாறு வேகமாகஏறபடும். மாற்றங்கள் தம்மை எங்கே இட்டுச்செல்லுமோ என அச்சமடைந்துள்ளனர் என்று கூறினார்.

எமதுமக்கள் பொருளாதார பரிசோதனைக்குப் பலிகடா ஆகியுள்ளனர். தற்போதைய நிலையில் ஒரேயொரு முடிவு தான் ஏற்படும். ரஷ்ய மக்களின் பொருளாதாரப் படுகொலையே அதுவாகும்.

ரஷ்யா ஒரு பிச்சைக்கார நாடாக மாறுவதைத் தடுக்கப் பொருளாதார அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் ஜெல்சினுக்கு ஆதரவாக இடம்பெற்ற ஊர்வலத்தில் சுமார் பத்தாயிரம் பொதுமக்களே கலந்துகொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கத். குருமாரின்

டில் மக்களைச் சந்தித்துப் பேசி சமாதானப் பணியில் ஈடுபட்டார்கள் என்று பி.பி. ஸிச் சேவையில் தெரிவித்தது.

### பட்டாசு

இச்சம்பவம் இடம்பெற்றது. தொழிற்சாலை முற்றாக எரிந்து சாம்பலாகியது. இதனால் 25 இலட்சத்திற்கு மேற்பட்ட நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### அரியாலை

நிலை தோன்றியது.

மேற்படி தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் செய்தி எழுதப்படும் வரையில் அறியவரவில்லை. (21)

## புள்ளிவிபரஆய்வாளர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

புள்ளி விபரத்திணைக்களத்தின் புள்ளிவிபர ஆய்வாளர் பதவிகளை நிரப்புவதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை இம்மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மிக விரைவில் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் சுமார் முப்பது வெற்றிடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஆனைக்கோட்டையில் விபத்து; குடும்ப பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் நடைபெற்ற லொறி-சைக்கிள் மோதலில் குடும்பப் பெண் ஸ்தலத்திலேயே பலியானார். கணவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

நேற்று மாலை 4-30 மணியளவில் நடைபெற்ற மேற்படி விபத்தில் ஐந்து பிள்ளைகளின் தாயாரான சாவக்கட்டைச் சேர்ந்த செ. மகளம்மா (வயது 40) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார். கணவரான செல்லத்துரை படுகாயமடைந்தார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணையை தமிழீழகாவல் துறை மேற்கொண்டு வருகிறது.

### ஆயிரம் புலிகளுக்காக

## சிறிலங்கா 10 லட்ச. தமிழரை பட்டினி போட்டுள்ளது

[லண்டன்]

சிறிலங்கா அரசு யாழ். குடாநாட்டில் ஆயிரம் பேருக்கு உணவை நிறுத்துவதற்காக [புலிகள்] பத்து லட்சம் மக்களின் வயிற்றிலடித்துள்ளது என்று அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பி. பி ஸி. செய்தியாளர் கிறிஸ்ரோப்பர் மொறிஸ் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய செய்திக்குறிப்பில் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் உணவு மற்றும் மருந்து வகைகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. பால் ஊட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துள்ள உணவு இல்லாததால் நோஞ்சான் குழந்தைகளைக் காணக்கூடியதாக இருக்கிறது என்கிறார் அவர்.

போஷாக்கின்மை மற்றும் மருந்துத் தட்டுப்பாட்டினால் நோய்கள் அதிகமாக ஏற்படுவதாகவும் தொற்றுநோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதுஎன்றும் டாக்டர் ராஜேந்திரத்தை மேற்கோள்காட்டி கிறிஸ்ரோப்பர்பொரிஸ் குறிப்பிடுகிறார்.

### மல்வத்தை

நாட்டில் நடக்கவிருப்பதாகச் சொல்லப்படும் இராணுவ நடவடிக்கையின் போது 20,000க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பலியாவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள வாரப்பத்திரிகை ஒன்று எடுத்த கருத்துக் கணிப்பீட்டின்படி சுமார் 70 சத விகிதமான சிங்கள மக்கள் இந்த உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அரசியல் தீர்வே சிறந்ததென கருதுகிறார்கள். இது இப்படியிருக்க, இப் பௌத்த பிக்குவின் மேற்படி செய்கையானது கண்டிக்கத்தக்கது என்று அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## தீவகத்தில் சிக்கியோருக்கு ஒய்வூதியம் வழங்க முயற்சி

(புங்குடுதீவு)

சிறிலங்கா படையினரின் பிடியில் சிக்கியுள்ள புங்குடுதீவு நயினாதீவுப் பகுதிகளைச் சேர்ந்த ஒய்வூதியக்காரர்களுக்குரிய கடந்த சில மாதங்களுக்கான கொடுப்பனவுகளை நேரில் சென்று கொடுப்பது சம்பந்தமானமுயற்சிகளைபுங்குடுதீவுநயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை மேற்படிஇடங்களுக்கு நேரில் சென்று வழங்குவதற்கு அரச அதிபர் ஊடாக செஞ்சிலுவைச் சங்கமூலம் சிறிலங்கா அரசிடம் அனுமதி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

### தீவுப்பகுதி

## விசேட இணைப்பதிகாரியாக யோகநாதன் தெரிவு

(கொழும்பு)

தீவுப் பகுதிகளுக்கென விசேட இணைப்பதிகாரியாக எஸ்.யோகநாதன் சிறிலங்கா அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேலதிக அரசாங்க அதிபர் தரத்தில் பணியாற்றுவார். தீவுப்பகுதிகயிலிருந்து நேரடியாகக் கொழும்புடன் தொடர்பு கொண்டு நிர்வாக அலுவல்களைக் கவனிக்க அவருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. திரு.எஸ். யோகநாதன் கடந்த வாரமே தீவுப் பகுதிக்கு கடமையைப் பொறுப்பேற்க சென்றிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது

### மெர்கெண்டைல் கிரடிற் லிமிட்டெட்

## நிதி நிறுவனத்தை மத்திய வங்கி பொறுப்பேற்பு

(கொழும்பு)

மேர்கென்டைல் கிரடிற் லிமிட்டெட் நிதி நிறுவனத்தை மத்தியவங்கி பொறுப்பேற்றுள்ளது.

பிரச்சினைக்குரிய இந்த நிறுவனத்திலிருந்து என். யு. ஜெயவர்த்தனா குடும்பம் விலகிக்கொண்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை

இந்த நிதிநிறுவனத்தில் சுமார் 25,000 பேர் பணவைப்பு இட்டுள்ளார்கள். 1956 இல் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிதிநிறுவனத்தில் ஜெயவர்த்தனாவுககும் அவரது குடும்பத்தினருக்கும் 59 வீதம் பங்குகள் உள்ளன.

நாளை செவ்வாயன்று புதிய இயக்குநர் சபை நியமிக்கப் படும் என்று மத்திய வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சீனா, இந்தியா, பாகிஸ்தான்

## நிலைகளைக் குறிபார்த்து அமெரிக்க ஏவுகணைகள்

அமெரிக்க அணுஆயுத ஏவுகணைகள் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கு குறிவைக்கப்பட்டுள்ளன என லண்டனில் இருந்து வெளியாகும் 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சோவியத் நாட்டின் பிளவிற்குப் பின்னர் அமெரிக்க இராணுவம் தனது புதிய இலக்குகளாக இந்த நாடுகளைத் தெரிவு செய்துள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று நடைபெறும்

குவேக்கர்ஸ் குழுவினருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கும் இடையே நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறவில்லை. இந்தச் சந்திப்பு இன்று நடைபெறும்.

### சமூகசேவை

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் லண்டன் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த இவர் யாழ். மாவட்டத்தில் தங்கி இருக்கும் காலத்தில் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி நேரடியாகச் சென்று அறிந்து கொள்வார். இப்பகுதி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிப்பதுடன் கடந்த காலத்தில் இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளபபட்ட நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளையும் பரிசீலனை செய்வார் என்றும், யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுடனும் கலந்துரையாடுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது